திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 74.27 அடி**

First Published : 09 Apr 2010 01:23:29 AM IST

ஈரோடு, ஏப்.8: பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை 74.27 அடியாக இருந்தது.
அணைக்கு விநாடிக்கு 955 கனஅடி வீதம் தண்ணீர் வந்தது. பாசன வாய்க்காலில் விநாடிக்கு 1,500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. ஆற்றில் தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்தப்பட்டுள்ளது. அணை நீர் இருப்பு 12 டிஎம்சி.

**போலி தேயிலை தூள் அழிப்பு**

First Published : 09 Apr 2010 04:13:44 AM IST

பொள்ளாச்சி, ஏப். 8: பொள்ளாச்சியில் கடந்த மாதம் நடந்த ஆய்வின்போது பறிமுதல் செய்யப்பட்டதில் 1,840 கிலோ தேயிலைத் தூள் கலப்படம் என்று கண்டறியப்பட்டது. அந்த தேயிலைத் தூள் வியாழக்கிழமை அழிக்கப்பட்டது.
÷பொள்ளாச்சியில் தேயிலைத் தூள் வியாபார நிறுவனத்தில் கடந்த மாதத்தில் திடீர் சோதனை நடத்தப்பட்டது. அப்போது 9,000 கிலோ தேயிலைத் தூள் பறிமுதல் செய்யப்பட்டது.
÷இந்த நிலையில் தேயிலை வாரிய கண்காணிப்பாளர் ஜான் பேட்ரிக் தலைமையில் நகராட்சி சுகாதார ஆய்வாளர்களும்  வியாழக்கிழமை தொழிற்பேட்டையில் உள்ள தேயிலை நிறுவன குடோனுக்குச் சென்றனர். பறிமுதல் செய்யப்பட்ட தேயிலைத் தூளில் 1,840 கிலோ மட்டும் கலப்படம் என்று கண்டறியப்பட்டதாகத் தெரிகிறது. அவை அவிக்கப்பட்டன. மீதமுள்ள தேயிலைத் தூளில் மீண்டும் மாதிரிகளை எடுத்துச் சென்றனர்.

**மண், நீர் மாதிரி சோதனை நடத்த வேண்டும்**

First Published : 09 Apr 2010 02:17:08 AM IST

திருவண்ணாமலை, ஏப். 8:  வேளாண் உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகள் தங்கள் நிலத்தில் மண், நீர் மாதிரி பரிசோதனை செய்ய வேண்டும் என வடமாதிமங்களம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் தனி அலுவலர் பழனியப்பன் வலியுறுத்தி உள்ளார்.
இச்சங்கம் சார்பில் விவசாயக் கூட்டுப் பொறுப்பு குழு, மகளிர் குழுக்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.   உதவி வேளாண் அலுவலர் வி.சேகர் பேசும்போது, செம்மை நெல் சாகுபடி, துல்லிய பண்ணையம், உயிர் உரங்கள், இயற்கை உரங்களை பயன்படுத்தி விவசாயம் செய்தல், நவீன வேளாண் கருவிகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும் சொட்டு நீர்பாசனம், துல்லிய பண்ணையம் குறித்து விளக்கப்பட்டது.
தோட்டக் கலை அலுவலர் என்.முருகன், வங்கிச் செயலர் ராமானந்தம், முன்னோடி விவசாயிகள் பிச்சாண்டி, வேலாயுதம், முனியன், கண்ணன், கூட்டுறவு ஒன்றிய வளர்ச்சி அலுவலர் துரை உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### மூலிகைப் பயிர்களுக்கு மானியத் தொகை

First Published : 09 Apr 2010 12:33:32 AM IST

வேதாரண்யம், ஏப். 8: வேதாரண்யம் அருகே மூலிகைப் பயிர்களுக்கு மானியத் தொகை அளிக்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

குரவப்புலம் கிராமத்தில் நடைபெற்ற விழாவுக்கு ஊராட்சித் தலைவர் த. விஜயலெட்சுமி தலைமை வகித்தார்.

ஒன்றியக் குழு உறுப்பினர் மா. ஜெயக்குமார், கார்த்திகை கிழங்கு உற்பத்தி மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாகை மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் ஜி. கணேசன் பங்கேற்று பேசினார். சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.கே. வேதரத்தினம் கார்த்திகை கிழங்கு உற்பத்தியாளர்கள் 112 பேருக்கு மானியத் தொகைக்கான காசோலைகளை அளித்தார்.

விழாவில் தோட்டக்கலை உதவி அலுவலர்கள் என்.சிவராமன், ஆர். ஞானசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### 50 பேருக்கு புல்வெட்டும் கருவி

First Published : 09 Apr 2010 02:08:58 AM IST

தருமபுரி, ஏப்.8: கால்நடை பராமரிப்புத் துறை மூலம் தருமபுரி மாவட்டத்தில் வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 50 பேருக்கு ரூ.12.24 லட்சம் மானியத்தில் புல்வெட்டும் கருவியை மாவட்ட ஆட்சியர் பெ. அமுதா வியாழக்கிழமை வழங்கி னார்.

தருமபுரி மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆட்சியர், 50 பேருக்கு ரூ.12.24 லட்சம் மானியத்தில் புல்வெட்டும் கருவி, தீவனப் பயிர் சாகுபடி செய்வதற்காக 32 சுய உதவிக் குழுவி னர் மற்றும் ஆத்மா திட்ட குழுவினர்களுக்கு ரூ.1.60 லட்சம், செம்மறியாடுகள் வளர்ப்பதற்காக 8 சுயஉதவிக் குழுக்க ளுக்கு ரூ.1.8 லட்சம் ஆகியவற்றை வழங்கினார்.

விழாவில் தருமபுரி கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் ஜே. பாலசுப்பிரமணி, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் தயாநிதி, வேளாண் இணை இயக்குநர் முகமதுஅலி, கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பேராசிரியர் மு. முருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### 29 லட்சம் கிலோ விளைபொருள்கள் விற்பனை

First Published : 09 Apr 2010 01:22:02 AM IST

திருச்செங்கோடு, ஏப் 8. திருச்செங்கோடு உழவர் சந்தையில் 2009-10 நிதி ஆண்டில் 29 லட்சத்து 9 ஆயிரத்து 618 கிலோ விளைபொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இது குறித்து உழவற் சந்தை நிர்வாக அலுவலர் சண்முகம் கூறியது:- திருச்செங்கோடு உழவர் சந்தையில் திருச்செங்கோடு, கபிலர்மலை, மல்லசமுத்திரம், எலச்சிபாளையம் பகுதிகளைச் சேர்ந்த வவிசாயிகள் தங்கள் விளைபொருள்களான காய்கறிகள், பழங்கள், மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான தயிர், மோர், நெய், சாம்பால், பனைவெல்லம் இவற்றுடன் வரமிளகாய, புளி, கொத்தமல்லி, பாடசிப்பயறு கொள்ளு, நாட்டுக்கோழி முட்டை ஆகியவற்றைக் கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள். கோடை காலத்தை முன்னிட்டு இளநீர், நுங்கு போன்றவையும் விற்பனை செய்யப்படுகின்றன. கடந்த நிதியாண்டில் சுமார் 4 கோடி மதிப்புள்ள பொருள்களை 5 லட்சத்து 77 ஆயிரத்து 400 பேர் வாங்கிப் பயனடைந்துள்ளனர். கடந்த நிதியாண்டில் கூடுதலாக 57 ஆயிரத்து 763

பேர் உழவர் சந்தைக்கு வருகை தந்துள்ளனர். 621 விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுளளது. கடந் ஆண்டில் மட்டும் 128 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

உழவர் சந்தையில் நடைபெறும் உழவர் உணவகத்தில் இதுவரை ரூ 31 லட்சத்து 48 ஆயித்து 976 மதிப்பிலான கிராமிய பாரம்பரிய உணவு வகைகள் விற்பனையாகியுள்ளன. இங்கு குழாய்புட்டு, பருப்பு அடை, வாழைப்பூ பஜ்ஜி, ராகி அடை, ராகி பக்கோடா, ராகி பிஸ்கட், கம்பு பிஸ்கட், தினை பாயசம் ஆதிய சத்துநிறைந்த உணவு வகைகள் விற்பனை செய்யப்படுகின்றன என்றார் அவர்.

**கால்வாய் பணியை விரைந்து முடிக்கக் கோரிக்கை**

First Published : 09 Apr 2010 04:55:29 AM IST

Last Updated : 09 Apr 2010 09:15:51 AM IST

தேவகோட்டை,ஏப்.8: தேவகோட்டையில் தினசரி சந்தைக்குச் செல்லும் வழியில் உள்ள கால்வாய் பணியை விரைந்து முடிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டைநகராட்சிக்குச் சொந்தமான தினசரி சந்தை பஸ் நிலையம் அருகில் உள்ளது. பெரியஅளவில் இயங்கி வந்த இதை பஸ் நிலைய விரிவாக்கத்துக்கு இடம் தேவைப்படுவதாகக் கூறி அண்மையில் பாதியளவில் இயங்கி வந்த கடைகளை காலிசெய்துவிட்டு கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகிறது.

இதனால் தினசரி சந்தைக்குச் செல்பவர்கள், திருப்பத்தூர் சாலையிலுள்ள பிரதான சாலையைத்தான் அதிகம் பயன்படுத்தி வருகிறார்கள். இந்நிலையில் பஸ் நிலையத்திலிருந்து, வாடியார் வீதி திருப்பம் வரை சாலையின் ஓரத்தில் கால்வாய் கட்டுவதற்காக ஒருமாதத்துக்கு முன்பு பள்ளம் தோண்டப்பட்டது.

இதனால் சந்தைக்குச் செல்வோர் மிகவும் சிரமப்பட்டனர். இதற்காக சவுக்குக் கட்டைகளால் ஆன பாதை அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாதையில் போடப்பட்டுள்ள கட்டைகள் முழுவதும் போடப்படாமல் உள்ளது.

கால்வாய் கட்டுவதற்காகத் தோண்டப்பட்டுள்ள பள்ளம் ஒரு ஆள் உயரத்துக்கு உள்ளதாலும், அகலமாக இருப்பதாலும், தினசரி சந்தைக்கு செல்ல மக்கள் மிகவும் சிரமப்படுன்றனர்.

இதுகுறித்து சந்தையில் கடை வைத்திருக்கும் கணேசன் கூறியது: தினசரி இந்த பள்ளத்தில் பலர் விழுந்து விடுகிறார்கள். ஒப்பந்தம் எடுத்தவர்கள் பணியை முடிக்காமல் இருப்பதால் வியாபாரம் பாதிக்கிறது. விரைந்து கட்டுமானப்பணியை முடித்து பொதுமக்கள் வந்துபோக நகராட்சி ஆவன செய்யவேண்டும் என்றார்.

பணியை ஒப்பந்தம் செய்தவர் விரைந்து பணியை முடிக்க வேண்டும் என தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம் என்று நகராட்சி அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கணியூர், கோவிந்தாபுரத்தில் நெல் கொள்முதல் துவக்கம்**

First Published : 09 Apr 2010 04:10:47 AM IST

உடுமலை, ஏப். 8: உடுமலையை அடுத்துள்ள கணியூரிலும், தாராபுரம் அருகிலுள்ள கோவிந்தாபுரத்திலும் நெல் கொள்முதல் நிலையங்கள் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

உடுமலையில் இருந்து 20 கி.மீ. தொலைவில் அமராவதி அணை அமைந்துள்ளது. இதன் மூலம் திருப்பூர், ஈரோடு, கரூர் வரையில் சுமார் 55 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. அமராவதி அணையின் வழியோர கிராமங்களான ராமகுளம், கல்லாபுரம், எலையமுத்தூர், குமரலிங்கம், கணியூர், கடத்தூர் வரையிலும், குறிப்பாக தாராபுரம் வட்டத்தில் உள்ள செலாம்பாளையம் மற்றும் தளாபட்டிணம் வரையிலான 50-க்கு மேற்பட்ட கிராமங்களில் ஆண்டுதோறும் 25 ஆயிரம் ஏக்கர் அளவில் நெல் பயிரிடப்படுகிறது.

ஆண்டுதோறும் அறுவடை சமயத்தில் இப்பகுதி விவசாயிகள் கடும் அவதிக்கு உள்ளாவது வாடிக்கையாக இருந்து வந்தது. நெல் அறுவடையின்போது வியாபாரிகள் ஒரு விலை நிர்ணயம் செய்து கொடுப்பதும், பிறகு விலையை குறைத்துக் கொடுப்பதும் விவசாயிகளை வேதனைக்குள்ளாக்கி வந்தது. நெல் அறுவடைக்குப் பின் விற்பதில் ஏற்படும் பல்வேறு குளறுபடிகளால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வந்தனர்.
இதனால் இந்தப் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்று, நீண்ட காலமாக விவசாயிகள் கோரி வந்தனர். இந்த கோரிக்கையை ஏற்ரு, உடுமலையை அடுத்துள்ள கணியூரிலும், தாராபுரம் அருகில் உள்ள கோவிந்தாபுரத்திலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டன.
இது குறித்து நுகர்பொருள் வாணிபக் கழக கொள்முதல் அலுவலர் சௌந்திரராஜன் கூறியது:
விவசாயிகளிடம் இனி நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்படும். அவர்கள் கொண்டு வரும் நெல்லுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்படும். நெல்லின் ஈரப்பதம் 17 சதவிதத்திற்கு அதிகமாக இருக்கக் கூடாது. முதல் தர நெல்லுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 11-ம், இரண்டாம் தர நெல்லுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 10.50-ம் வழங்கப்படும், என்றார்.

தினமலர்

**வெளிச்சந்தையில் 34 ஆயிரம் டன் சர்க்கரை வாங்குகிறோம்:அமைச்சர் வேலு தகவல்**
ஏப்ரல் 09,2010,00:00 IST

சென்னை:"மத்திய அரசு 10 ஆயிரம் டன் சர்க்கரை தான் தருகிறது. வெளிச்சந்தையில் 34 ஆயிரம் டன் சர்க்கரையை வாங்கி, கிலோ 13.50க்கு தமிழக அரசு வழங்குகிறது," என்று அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

பட்ஜெட் மீது சட்டசபையில் நடந்த பொது விவாதம்:சிவபுண்ணியம்: விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவது குறித்து இப்போது பிரதமர் கூட்டம் நடத்துகிறார். இடதுசாரிகள் போராட்டம் நடத்தும் நாளில், கூட்டம் நடத்த வேண்டிய அவசியம் என்ன? உணவுப் பொருள்களின் விலை உயர்வுக்கு ஆன்-லைன் வர்த்தகம் தான் காரணம். விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும்.அமைச்சர் வேலு: உணவுப் பொருள்களுக்கு ஆன்-லைன் வர்த்தகம் கூடாது என, பிரதமருக்கு முதலில் கடிதம் எழுதியவர் நமது முதல்வர் தான். அதன்பின், எந்த உணவுப் பொருளுக்கும் ஆன்-லைன் வர்த்தகம் கிடையாது. அது கூடாது என முடிவு எடுக்கப்பட்டது.துவரம் பருப்பு, கனடா, பர்மா போன்ற வெளிநாடுகளில் இருந்து வரவழைக்கப்படுகிறது.

இந்தியாவில் மட்டுமல்ல, உலகளவில் பருப்பு விலை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்று தான், சிறப்பு பொதுவினியோக திட்டம் உருவாக்கப்பட்டு, பருப்பு, பாமாயில் வகைகள் வழங்கப்படுகின்றன.இடதுசாரிகள் ஆளும் மேற்குவங்கத்தில் பொது வினியோகத்தில் பருப்பு விலை கிலோ 86 ரூபாய். தமிழகத்தில் தான் உணவு மானியமாக 4,000 கோடி ரூபாயை ஒதுக்கி, மக்கள் பாதிக்கப்படாமல் பார்த்துள்ளோம். பதுக்கலை தடுக்க தமிழகத்தில் தான் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.கடந்த மார்ச் வரை தமிழகத்தில் ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 95 டன் பருப்பு விற்கப்பட்டுள்ளது. பொது வினியோகத் திட்டத்தில் கிலோ 13.50க்கு சர்க்கரை வழங்குகிறோம். கோல்கட்டா, திருவனந்தபுரத்தில் அப்படியில்லை.

மத்திய அரசு 10 ஆயிரத்து 820 டன் சர்க்கரை தான் தருகிறது. மீதத் தேவைக்காக, 34 ஆயிரம் டன் சர்க்கரையை வெளிச்சந்தையில் வாங்கி, அதை 13.50 விலைக்கு தருகிறோம். விலைவாசியை முதல்வர் கட்டுப்படுத்தியுள்ளார்.

சிவபுண்ணியம்: பொது வினியோகத் திட்ட விற்பனையை குறை சொல்லவில்லை. அதை தாண்டி விற்கப்படும் விலை, மற்ற மக்கள் அதிக விலைக்கு வாங்குகின்றனர். அவர்களையும் அரசு கண்டுகொள்ள வேண்டும்.அமைச்சர் வேலு: வறுமைக் கோட்டுக்கு கீழ், மேல் என்பது மற்ற மாநிலங்களில் தான். தமிழகத்தில் அனைவருக்கும் பொது வினியோகத் திட்டம் என்ற அடிப்படையில் ஒரு கோடியே 88 லட்சம் குடும்பங்களுக்கும் பரவலாக்கப்பட்டுள்ளது.இவ்வாறு விவாதம் நடந்தது.

**பருப்பு தான் கவலையளிக்கிறது: டில்லியில் ஸ்டாலின் பேச்சு:போலி ரேஷன் அட்டையை ஒழிக்கவும் யோசனை**
ஏப்ரல் 09,2010,00:00 IST

'அரிசி, கோதுமை, சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலை ஓரளவு கட்டுக்குள் வந்துவிட்ட நிலையில், பருப்பின் விலை மட்டும் தான் கவலையளிக்கிறது. எனவே, பருப்பின் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகள் எடுப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும்' என்று துணை முதல்வர் ஸ்டாலின் கூறினார். மேலும், பயோ மெட்ரிக் முறை கார்டு வழங்கி, போலி ரேஷன் அட்டையை ஒழிக்க வழி காண வேண்டும் என்றார்.விலைவாசி உயர்வு குறித்து 10 மாநிலங்களைச் சேர்ந்த முதல்வர்களை, பிரதமர் மன்மோகன் சிங் அழைத்து ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனைக் கூட்டம், பிரதமர் இல்லத்தில் நேற்று மாலை 4.30 மணிக்கு நடைபெற்றது. இ

தில் கலந்து கொண்டு துணை முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:விலைவாசி உயர்வு குறித்து, அனைத்து மாநில முதல்வர்களை அழைத்து ஏற்கனவே ஒரு ஆலோசனைக் கூட்டம் டில்லியில் நடத்தப்பட்டது. பிரதமர் தலைமையில் நடைபெற்ற அந்த கூட்டத்தில், அனைத்து மாநில முதல்வர்களின் தரப்பிலும், மத்திய அரசு தரப்பிலும் பல்வேறு யோசனைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. அந்த வகையில் அடுத்தடுத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் விளைவாக அரிசி, கோதுமை, சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன. சர்க்கரையின் விலை கூட பொதுமக்களுக்கு ஓரளவு சமாளிக்கும் வகையில் வந்துள்ளது. ஆனால், பருப்பு வகைகளின் விலைகள் மட்டும் தான் இன்னும் கவலையளிக்கக் கூடியதாக இருக்கிறது. பருப்பு வகைகளின் விலை உயர்வுக்கு, தேவைக்கு ஏற்ப சப்ளை இல்லாததே முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

பருப்பு தேவையை சமாளிக்க முக்கிய நடவடிக்கையாக, இறக்குமதியை மட்டுமே பெரிதும் நம்ப வேண்டியுள்ளது. எனவே, அரிசி, கோதுமை போன்றவற்றை மட்டுமே இப்போது சேமித்து வைத்து வினியோகிக்கப்பட்டு வருகின்றன. அதுபோல பருப்பையும் சேமித்து வைத்து, அதை தேவைக்கு ஏற்ப அதாவது, சந்தையில் விலை அதிகரிக்கும் போது தேவைக்கு ஏற்றபடி வினியோகம் செய்யலாம். தவிர, பொது வினியோகக் கடைகள் மூலமும் பருப்பு வகைகளை வினியோகம் செய்திடலாம்.தற்போது பருப்பு வகைகளை, விவசாயிகள் மத்தியில் ஒட்டு மொத்தமாக பயிரிடுவது வழக்கமில்லாது உள்ளது. கூடுதல் பயிராக மட்டுமே பருப்பு வகைகளை பயிரிடுகின்றனர்.

அரிசி, பருத்தி, கரும்பு போல ஒட்டு மொத்தமாக ஏக்கர் கணக்கில் பயிரிடுவது போல, பருப்பு வகைகளையும் பயிரிட நடவடிக்கை எடுத்திட வேண்டும். பருப்பு வகைகளை முக்கிய பயிராக பயிரிடுவதற்குண்டான சாத்தியக் கூறுகளை ஆராய, ஒரு நிபுணர் குழு அமைத்து தமிழக அரசு ஆராய்ந்து வருகிறது.பருப்பு பயிரிடும் விவசாயிகளுக்கு, கொள்முதல் ஆதார விலையை அதிகரித்து தந்திட வேண்டும். குளிர்சாதன சேமிப்பு பெட்டக வசதிகள் பெரிய அளவில் இல்லாமல்

இருப்பதும் ஒரு குறை. இந்த வசதிகளை அதிகப்படுத்துவதன் மூலம் பழங்கள், காய்கறிகள் உள்ளிட்டவை பெரிய அளவில் வீணாகாமல் தடுத்திட முடியும்.

வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள மக்களுக்கு ரேஷன் கடைகள் மூலம் வினியோகிப்பதற்காக, மத்திய தொகுப்பில் இருந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் அரிசி ஒதுக்கீட்டின் அளவை அதிகரிக்க வேண்டும். இதன் மூலம், ஏற்கனவே மத்திய அரசுக்கு சேமிப்பு கிட்டங்கி வசதிகள் பற்றாக்குறை இருப்பதாகக் கூறப்படும் பிரச்னைகளும் நிவர்த்தியாகும். போலி ரேஷன் அட்டைகளை ஒழித்துக் கட்ட, பயோ மெட்ரிக் அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு ஸ்டாலின் பேசினார்.

ஏன் இந்த ஆலோசனை:விலைவாசி உயர்வு குறித்து முக்கிய எதிர்க்கட்சிகளான பா.ஜ.,வும் இடதுசாரிகளும், நாடு தழுவிய அளவில் ஆர்ப்பாட்டங்களை நடத்த ஆரம்பித்துள்ளன. மேலும் வரக்கூடிய பட்ஜெட் கூட்டத்தொடரில் விலைவாசி பிரச்னையை முன்வைத்து, அரசுக்கு எதிராக வெட்டுத் தீர்மானம் கொண்டு வருவது என சமாஜ்வாடி, இடதுசாரிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன. இதற்கு, பிரதான எதிர்க்கட்சியான பா.ஜ.,வும் ஆதரிக்கும் சூழ்நிலை உள்ளது.

இத்தகைய பரபரப்பான அரசியல் சூழ்நிலையில், 10 மாநிலங்களின் முதல்வர்களை அழைத்து, விலைவாசி குறித்து பிரதமர் ஆலோசனை நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. நேற்றைய கூட்டத்தில் தமிழகம், பஞ்சாப், அரியானா, பீகார், அசாம், உத்தர பிரதேசம், சட்டீஸ்கர், குஜராத், மேற்கு வங்கம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களின் முதல்வர்கள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, விவசாயத்துறை அமைச்சர் சரத் பவார், பிரதமரின் பொருளாதார ஆலோசகர் ரங்கராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. - நமது டில்லி நிருபர் -

**விவசாயிகளுக்கு பயிற்சி**

ஜெயங்கொண்டம் :   அரியலூர் மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண் தொழில் நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) திட்டத்தின் கீழ் மண் மாதிரி எடுத்தல், விதைநேர்த்தி செய்தல், எலி ஒழிப்பு, பயிறு சாகுபடி, செம்மை நெல் சாகுபடி ஆகியன குறித்த பயிற்சி முகாம் ஜெயங்கொண்டம் அருகே உள்ள கவரப்பாளையத்தில் நடந்தது.
அரியலூர் மாவட்ட கலெக்டர்(பொ) பிச்சை தலைமை வகித்து முகாமை துவக்கி வைத்து வேளாண் கையேடுகளை வழங்கி பேசினார். ஆண்டிமடம்  யூனியன் சேர்மன் தேன்மொழி முன்னிலை வகித்தார். அரியலூர் மாவட்ட ஆத்மா திட்ட இயக்குனர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார். ஆண்டிமடம் ஆத்மா திட்ட தலைவர் தர்மதுரை, கவரப்பாளையம் ஊராட்சி தலைவர் சவுந்தர்ராஜன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.
வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்அலுவலர் சாந்தி, தொழில் நுட்ப வல்லுனர் தீபா, வேளாண் துணை இயக்குனர்கள் சிவக்குமார்,ஜெயக்குமார் மற்றும் பலர் விளக்கி பேசினர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை டாக்டர் மாரிமுத்து, வேளாண் அலுவலர் சுகந்திஆகியோர் செய்திருந்தனர். வேளாண்துணை அலுவலர் பொய்யாமொழி  நன்றி கூறினார்.

**வேளச்சேரி, கொளத்தூரில் மழைநீர் கால்வாய் அமைக்க பணி ஆணை:மேயர் அறிவிப்பு**

சென்னை:மழைக் காலங்களில் வெள்ளப் பாதிப்பை தடுக்க, வேளச்சேரி, கொளத்தூர் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய்களை கட்ட, பணி ஆணைகள் வழங்கப் பட்டதாக மேயர் சுப்ரமணியன் கூறினார்.மேயர் சுப்ரமணியன் நிருபர்களிடம் கூறியதாவது:

மழைக் காலங்களில் நகரில் வெள்ள பாதிப்பை தடுக்க, ஜவகர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ், 1,447 கோடி ரூபாய் மதிப் பீட்டில் புதிய மழைநீர் வடிகால் கால்வாய்கள் கட்டுவது, நீர்வழித்தடங்களை ஆழப்படுத்தி கரைகளை சீரமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.இதில், 860 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மாநகராட்சி சார்பில், நகரில் 12 பகுதிகளாக பணிகள் பிரிக்கப் பட்டு, தனித்தனியே ஒப்பந்தங்கள் கோரப் பட்டது.

இதில், வேளச்சேரி பகுதிகளில் 41 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கொளத்தூர் பகுதியில், 22 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப் பீட்டில் புதிய மழைநீர் வடிகால்வாய்கள் கட்டுவதற்கும், வடக்கு பக்கிங் காம் கால்வாயை தூர் எடுத்து ஆழப்படுத்தியும், கரைகளை பலப்படுத்தும் பணிக்கு 16 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டு பணிஆணைகள் வழங்கப் பட்டுள்ளன.

பத்து நாட்களில் பணிகள் துவங்கப்படும்.அதுபோல், தெற்கு பக்கிங்காம் கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய், ஓட்டேரி நல்லா கால்வாய் ஆகியவைகளை அகலப் படுத்தி தூர் எடுத்து, கரைகளை பலப்படுத்தும் பணிகளுக்கு தேவைப்படும் ஒப்பந்தங்கள் விடப் பட்டு, ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பந்த தொகையை குறைக்கும்படி மாநகராட்சி பேச்சு நடத்தி வருகிறது.

முடிவு ஏற்பட்டதும், வரும் 29ம் தேதி நடைபெறும் மன்ற கூட்டத்தில்தீர்மானம் கொண்டு வரப்பட்டு பணிஆணை வழங் கப்படும்.தொடர்ந்து, மீதமுள்ள ஆறு பணிகளுக்கும் ஒப்பந்தம் கோரப்படும்.இவ்வாறு மேயர் கூறினார்.

**வேளாண் ஆராய்ச்சி விரிவாக்கம் வலுப்பெற வேண்டும்: துணைவேந்தர்**

கோவை: "வேளாண் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க இணைப்பு மென்மேலும் வலுப்பெற வேண்டும். முக்கியமான பண்ணை பிரச்னைகளை தெளிவாகவும் விரிவாகவும் ஆய்வு செய்ய வேண்டும்," என்று கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார்.

கோவை மாவட்டத்தின் புதுப்பிக்கப்பட்ட வேளாண் பணிமனைக் கருத்தரங்கம், கோவை வேளாண் பல்கலையில் நடந்தது. கருத்தரங்கை துவக்கி வைத்து பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசுகையில்,"இந்த கருத்தரங்கம், ஆராய்ச்சி-விரிவாக்க இணைப்பு மென்மேலும் வலுப்பெற்று, விவசாயிகளுக்கு பயன் மிகுந்த தொழில் நுட்பங்களை எடுத்துச் சொல்ல வழிவகுக்கும். முக்கியமான பண்ணை பிரச்னைகளை தெளிவாகவும் விரிவாகவும் ஆய்வு செய்ய வேண்டும். "ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளியன்று விரிவாக்கப் பணியாளர்களுக்கு மிகவும் லாபகரமான, பயனுள்ள முக்கிய தலைப்புகளில் சிறப்பு சொற்பொழிவுகள் மற்றும் புதிய அறிவியல் செயல்முறை விளக்கம் அளிக்க ஏற்பாடு செய்யப்படும்," என்றார். பல்கலையின் விரிவாக்க கல்வி இயக்குனர் கலைச்செல்வன் பேசுகையில், "அனைத்து மாவட்டங்களிலும் முன்னோடி விவசாயிகள் வயல்களில் முதல்நிலை செயல்விளக்கம் நடத்தப்படும். இந்நிகழ்ச்சியால் அப்பகுதி விவசாயிகள் அனைவருக்கும் புதிய தொழில் நுட்பங்களை காண்பிக்க டியும்," என்றார்.

பயிற்சித் துறைத் தலைவர் விஜயராகவன் பேசுகையில், "விஞ்ஞானிகளும் விரிவாக்கப் பணியாளர்களும் ரயில் தண்டவாளம் போல் இணைந்து சிறப்பாக பணிபுரிய வேண்டும். விவசாயிகளின் முக்கிய பண்ணைப் பிரச்னைகளுக்கு தீர்வு கண்டு வேளாண் வளர்ச்சி அடையவும், பண்ணை வருமானத்தைப் பெருக்கவும் உதவ வேண்டும். 'ஆத்மா' திட்டத்தின் கீழ், விரிவாக்கப் பணியாளர்களில், தேர்வு செய்யப்படும் சாதனை விவசாயிகளுக்கு பல்கலையில் சிறப்பு பயிற்சி அளிக்கப்படும்," என்றார். வேளாண் துறை துணை இயக்குனர் சங்கரராஜ் உட்பட, வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, விதை சான்றளிப்பு துறை, பட்டு வளர்ப்புத் துறை, வேளாண் வணிக துறைகளை சேர்ந்த உயர் அதிகாரிகள், விரிவாக்க பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்

**மஞ்சிக்கு தட்டுப்பாடு கயிறு உற்பத்தியாளர் கவலை**

பொள்ளாச்சி: கயிறு திரிக்க மஞ்சி கிடைக்காததால், உற்பத்தியாளர்கள் கவலை அடைந்துள்ளனர். பொள்ளாச்சி சுற்றுப்பகுதிகளில், தென்னை விவசாயம் பிரதானமாக உள்ளதால், தென்னை சார்ந்த பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதில், நார்கட்டி. மஞ்சி உள்ளிட்ட பொருட்கள் அதிகளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. சுற்றுப்பகுதிகளில் தென்னை மஞ்சிகளிலிருந்து கயிறு திரிக்கும் பணியும் பிரதானமாக உள்ளது. ஆனால், வெளிநாடுகளுக்கு மஞ்சி அதிகளவில் ஏற்றுமதி செய்வதால், உள்ளூர் பகுதியில் கயிறு திரிக்க மஞ்சி கிடைக்காமல் தொழிலாளர்கள் கவலை அடைந்துள்ளனர்.

உற்பத்தியாளர்கள் கூறியதாவது: பொள்ளாச்சி சுற்றுப்பகுதியில், கிணத்துக் கடவு, ஆச்சிபட்டி, முள்ளுபாடி, ஜமீன்ஊத்துக் குளி உள்ளிட்ட பகுதிகளில் கயிறு திரிக்கும் பணியில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஈடு பட்டுள்ளன. சுற்றுப்பகுதிகளில், கயிறு திரிக்கும் மூல பொருளானா மஞ்சி கிடைக்காததால், பழநி அருகேயுள்ள கிராமப்புறங்களிலிருந்து கொண்டு வரப்படுகிறது. ஒரு கட்டு மஞ்சி 900 ரூபாய்க்கு வாங்கப்படுகிறது. அவற்றிலிருந்து 50 முதல் 60 கயிறு வரையும் தயாரிக்கப்படுகிறது. நாளொன்றுக்கு 500 கயிறு வரை திரிக்கப்படும். இவற்றில், 100 கயிறு உள்ளிடக்கிய ஒரு கட்டு கயிறு 300 முதல் 400 ரூபாய் வரை விற்பனையாகிறது.கூலியாட்களுக்கு, கூலி வழங்கியது போக, நாளொன்றுக்கு 100 ரூபாய் மட்டுமே கிடைக்கிறது.
மேலும், தற்போது மூல பொருட்களின் விலையும் உயர்ந்து வருவதால், உற்பத்தியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இவ்வாறு, உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

**1,840 கிலோ போலி டீத்தூள் அழிப்பு: தேயிலை வாரியம் நடவடிக்கை**

பொள்ளாச்சி: பொள்ளாச்சியில் பறிமுதல் செய்த 1,840 கிலோ போலி டீத்தூளை தேயிலை வாரிய அதிகாரிகளும், சுகாதார அதிகாரிகளும் அழித்தனர். பொள்ளாச்சியில் தென்னிந்திய தேயிலை வாரிய செயல்இயக்குனர் நசீம் தலைமையில் அதிகாரிகள் பிப். 13ம் தேதி பொள்ளாச்சியில் ரெய்டு நடத்தினர். அப்போது, மார்க்கெட் ரோட்டில் 'கணேஷ் டிரேடர்ஸ்' நிறுவனத்தின் பின் பகுதியில் ரகசிய அறையில் கலப்படம் செய்த டீத்தூள்கள் மூட்டை மூட்டையாக பதுக்கி வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

குடோனின் மேல் பகுதியில் ஆய்வு செய்த போது மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய ரசாயன பவுடர்கள் பதுக்கி வைத்திருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. கலப்படம் செய்யப்பட்ட டீத்தூளை பேக்கிங் செய்வதற்காக, 'பிராண்ட்' கம்பெனி பெயர்களில் தயாரிக்கப்பட்டிருந்த போலி லேபிள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், 'நியூ கணேஷ் டீ டிரேடர்ஸ்' என்ற கடையிலும் கலப்பட டீத்தூள் கண்டுபிடிக்கப்பட்டது. உடுமலை ரோட்டில் சக்தி கூட்டுறவு தொழில்பேட்டையில் 'டாப்சன் புட் புராடெக்ஸ்' நிறுவனத்தில் ஆய்வு செய்து, கலப்படம் செய்வதற்கு பயன்படுத்தும் இயந்திரங்களையும், ரசாயன பவுடர்கள், டீத்தூள் பண்டல்களை பறிமுதல் செய்தனர். பொள்ளாச்சியில் மொத்தம் எட்டாயிரம் கிலோ டீத்தூள் பண்டலுக்கு சீல் வைக்கப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட கலப்பட டீத்தூள், ரசாயன பவுடர் ஆகியவற்றில் மாதிரி எடுத்து மைசூரிலுள்ள ஆராய்ச்சி மையத்திற்கு ஆய்வுக்காக அனுப்பி வைத்தனர். ஆய்வில், டீத்தூளில் ரசாயன பவுடர் கலந்திருப்பதும், அதை பயன்படுத்துவோருக்கு பல்வேறு நோய்கள் வருவதற்கும் வாய்ப்புள்ளதாக உறுதி செய்யப்பட்டது. தேயிலை வாரிய செயல் இயக்குனர் உத்தரவின்பேரில், தேயிலை வாரிய கண்காணிப்பாளர் ஜான் பேட்ரிக், இன்ஸ்பெக்டர் தியாகராஜன், நகராட்சி சுகாதார ஆய்வாளர்கள், தெற்கு வட்டார சுகாதார ஆய்வாளர்கள் கலப்பட டீத்தூள் அழிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

தேயிலை வாரிய கண்காணிப்பாளர் ஜான்பேட்ரிக் கூறியதாவது: பொள்ளாச்சியில் 4,460 கிலோ டீத்தூள் சீல் வைக்கப்பட்டு மாதிரி எடுக்கப்பட்டது. இவை  உயிருக்கு கேடு விளைவிக்கும் ரசாயனம் பவுடர் கலப்படம் செய்திருப்பது உறுதி செய்யப்பட்டது. பொள்ளாச்சி கணேஷ் டிரேடஸ், டாப்சன் நிறுவனத்தில் மொத்தம் 1,840 கிலோ டீத்தூளில் சுண்ணாம்பு பவுடர் கலந்து குழிதோண்டி அழிக்கப்பட்டது. மீதமுள்ள 2,620 கிலோ டீத்தூள் பண்டலுக்கு சீல் வைக்கப்பட்டு மறுமாதிரி எடுக்கப்பட்டுள்ளது. டீத்தூளில் கலப்படம் செய்த கணேஷ் டிரேடர்ஸ் உரிமையாளர் விஜயகுமார், டாப்சன் நிறுவன உரிமையாளர் கணேஷ்  மீது சுகாதார அதிகாரிகள் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கவுள்ளனர். பொள்ளாச்சியில் டீத்தூள் கலப்பட தொழிற்சாலை நடத்துவதால், அவர்களின் உரிமத்தை ரத்து செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது

**விளை நிலங்களை விற்காதீர்கள் : விவசாயிகளுக்கு வைகோ யோசனை**

வடமதுரை : விளை நிலங்கள் குறைந்து வருவதால் இன்னும் சில ஆண்டுகளில் நாட்டில் பஞ்சம் வரப்போகிறது. அப்போது நிலத்தின் மதிப்பு நூறு மடங்கு அதிகரிக்கும். எனவே தற்போது கிடைக்கும் சொற்ப விலைக்காக நிலங்களை விற்று விடாதீர்கள் என பொதுச் செயலாளர் வைகோ பேசினார். திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை, அய்யலூர் உள்பட பல கிராமங்களில் ம.தி.மு.க., கொடியேற்றி, மே 28ல் நடக்க உள்ள கேரளா ரோடு மறியல் குறித்து ம.தி.மு.க., பொதுச்செயலாளர் வைகோ பிரசாரம் செய்தார்.
அவர் பேசியதாவது: முல்லை பெரியாறு அணையை கேரள அரசு எந்நேரமும் உடைக்க திட்டமிட்டு வருகிறது. அணை உடைக்கப்பட்டால் தமிழகத்தில் 5 மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கு பெரிய ஆபத்தாகும். இதனை தடுக்கவே ம.தி.மு.க., கேரள அரசை கண்டித்து மே 28ல் அறப்போராட்டம் செய்கிறது. இலவசங்களால் சோம்பேறித்தனம் ஏற்பட்டு வருகிறது.ஓட்டிற்கு பணம் தருவது ஜனநாயகத்திற்கு ஆபத்து.வட மாநிலங்களில் உள்ள மாவோயிஸ்ட்கள், நக்சலைட் பிரச்னைகள் தமிழகத்திற்கும் வர வாய்ப்புள்ளது.கிராமத்தில் விவசாயம் செய்வது வேதனையாக உள்ளது.வேலைக்கு ஆள் கிடைப்பதில்லை. விளைப்பொருளுக்கு கட்டுபடியான விலை இல்லை.தற்போது கிராமப்புற இளைஞர்களுக்கு விவசாய வேலையே தெரியாமல் உள்ளது.குடிப்பழக்கம் ஒரு தலைமுறையையே அழித்து விடும். கிராம மக்கள் ஜாதி, கட்சியின் பெயரால் பிரச்னைகளை ஏற்படுத்தி கொள்ளாமல் ஒற்றுமையாக இருக்க வேண்டும். விளை நிலங்கள் குறைந்து வருவதால் இன்னும் சில ஆண்டுகளில் உலகம் முழுவதும் பஞ்சம் வர போகிறது. அப்போது நிலத்தின் மதிப்பு நூறு மடங்கு அதிகரிக்கும். எனவே தற்போது கிடைக்கும் சொற்ப விலைக்காக நிலங்களை விற்று விடாதீர்கள்.இவ்வாறு அவர் பேசினார். பிரசார பயணத்தில் வைகோவுடன் திண்டுக்கல் மாவட்ட செயலாளர் செல்வராகவன், ஒன்றிய செயலாளர் பாலசந்திரன், அ.தி.மு.க., தொகுதி செயலாளர் பழனிச்சாமி, ஒன்றிய செயலாளர் அழகர்சாமி உள்பட பலர் உடன் சென்றனர்.

**உரம், பூச்சி மருந்து விற்பனையில் கட்டுப்பாடுகளை மீறினால் நடவடிக்கை**

திண்டுக்கல் : மாவட்டத்தில் உரம் மற்றும் பூச்சி மருந்து கடைகளுக்கான, விதிகளை கடுமையாக கடைபிடிக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது.
மாவட்ட கலெக்டரின் அறிக்கை: 'உரம் மற்றும் பூச்சிமருந்து கடைகளில், இருப்பு, விலை விபரங்கள் தவறாது குறிப்பிடப்படுவதுடன், விற்பனையின் போது விவசாயிகளுக்கு உரிய பில் வழங்க வேண்டும். உர விற்பனையின்போது, சம்பந்தப் பட்ட மூடையில் குறிப் பிட்டுள்ள சில்லரை விற்பனை விலையை விட கூடுதலாக பணம் வசூலிக்கக் கூடாது.
பூச்சி மருந்துகள் விற் பனை செய்யும்போது, காலாவதியான மருந்துகளை விற்கக்கூடாது. சரியான விலைக்கு விற்க வேண்டும். மீறினால் உரக்கட்டுப் பாட்டு மற்றும் பூச்சி மருந்து சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இது

தொடர்பாக புகார் தெரிவிக்க விரும்புவோர், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளரை 94433 94826 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.' இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**விதை கிராமத்திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி**

குளித்தலை: கரூர் மாவட்டம் தோகமலை யூனியன் சின்னப்பனையூர் பஞ்சாயத்தில் விதை கிராமத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது.சின்னப்பனையூர் உழவர் மன்ற அமைப்பாளர் கந்தசாமி தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் சேகர் வரவேற்று, வேளாண்மை மானிய திட்டம் குறித்து பேசினார்.

துணை வேளாண்மை அலுவலர் கண்ணதாசன் செம்மை நெல் தொழில் நுட்பங்களான குறைந்த விதையளவு (ஏக்கருக்கு இரண்டு கிலோ) ஒரு ஏக்கருக்கு ஒரு சென்ட் நாற்றங்கால், இளம் வயது நாற்றங்கால் நடுதல், குத்துக்கு ஒரு நாற்று சதுர முறையில் நடவு செய்தல், இயற்கை மற்றும் தொழு உரங்களை இடுதல், கோனாவீடர் கருவி மூலம் களை எடுத்தல் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பம் குறித்து பேசினார்.

வேளாண்மை அலுவலர் காதர்மொஹைதீன் வேளாண்மை துறை மூலம் மானிய திட்டம் மற்றும் நடப்பு தொழில் நுட்பங்களை பற்றி விரிவாக பேசினார். குளித்தலை விதைச் சான்று அலுவலர் கிருஷ்ணமூர்த்தி விதைகளின் முக்கியத்துவம், தரமான பயிறு விதை உற்பத்தி மற்றும் பயிரில் விதைப்பண்ணை அமைத்தல் பற்றி விரிவாக பேசினார். முன்னோடி விவசாயிகள் அசோக்குமார், பழனியப்பன், வெங்கடாசலம், செல்வராஜ், செல்வம், நடராஜன், இந்திரா உழவர் மன்ற அமைப்பாளர் கண்ணதாசன் உட்பட 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். உதவி வேளாண் அலுவலர் குணசேகரன் நன்றி கூறினார்.

**கால்நடை உற்பத்தியை உயர்த்த வேண்டும் முன்னாள் இயக்குனர் அறிவுறுத்தல்**

நாமக்கல்: நோய் எதிர்ப்பு திறன் கொண்ட கால்நடைகள் உற்பத்தியை இரண்டு மடங்கு உயர்த்த வேண்டும்" என, இந்திய கால்நடை ஆராய்ச்சி நிலைய முன்னாள் இயக்குனர் மகேந்திரபால் யாதவ் பேசினார். இந்திய கால்நடை மருத்துவ நோய் எதிர்ப்பு திறன் இயல் மற்றும் உயிர் தொழில் நுட்பவியல் வல்லுநர் குழுமத்தின் 26வது ஆண்டு மாநாடு மற்றும் 'புதிய நோய் எதிர்ப்புதிறன், உயிர் தொழில் நுட்பம் மூலம் கால்நடை, கோழிகளுக்கு சீதோஷ்ண மாற்றத்தால் ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வு காணுதல்' என்ற தலைப்பில் மூன்று நாள் கருத்தரங்கு, நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலையில் நேற்று துவங்கியது.தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை துணைவேந்தர் தங்கராஜூ தலைமை வகித்து பேசியதாவது:

கால்நடைகள் தொற்றுநோய்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றன. கால்நடைகள் இடம் பெயர்ந்தல், உலக வெப்ப மயமாதல் போன்ற கால சூழ்நிலை மாறுபாடே இதற்கு முக்கிய காரணம். இதுபோன்ற தொற்றுநோய்கள் வீட்டு பிராணிகளுக்கும் பரவுகிறது. 30 ஆண்டுகளில் கால்நடைளை பல்வேறு தொற்றுநோய்கள் தாக்கியுள்ளன. ஆராய்ச்சி யாளர்கள் கவனம் செலுத்தி, இதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்திய கால்நடை ஆராய்ச்சி நிலைய முன்னாள் இயக்குனர் மகேந்திரபால் யாதவ் பேசியதாவது:நாட்டின் மொத்த கால்நடை உற்பத்தி திறன் ஐந்து முதல் 35 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. மற்ற நாடுகளில் மொத்தஉற்பத்தி திறன் 32 சதவீதத்துக்கும் அதிகமாகவே உள்ளது. நம் நாட்டில் ஒருவருக்கு குறைந்தபட்சம் 2 கால்நடை வீதம் வளர்க்கின்றனர். ஏற்றுமதி, தனி மனித உற்பத்தித்திறன் குறைவாக உள்ளது.

உற்பத்தி திறனை இரண்டு மடங்கு உயர்த்த வேண்டும். உலகளவில் இந்தியாவில் 60 சதவீதம் இறைச்சி உற்பத்தி செய்யப்படுகிறது. அதில், ஏற்றுமதி 2 சதவீதம் மட்டுமே உள்ளது. நோய் எதிர்ப்பு திறன் உள்ள கால்நடை மற்றும் பறவைகளை அதிகம் உற்பத்தி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக அழகப்பா பல்கலை துணவேந்தர் ராமசாமி கருத்தரங்கை துவக்கி வைத்தார். இந்திய கால்டை ஆராய்ச்சி நிலைய செயலாளர் பழனிசாமி வரவேற்றார். தொடர்ந்து விழா மலர் வெளியிடப்பட்டது. ஆராய்ச்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன. நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய டீன் சந்திரஹாசன், துறைத் தலைவர் துரைராஜன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**தேசிய சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்**

நாமக்கல்: மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம், சென்னை சி.பி.ஆர். பவுன்டேசன், நமக்கல் ஆர்.பி.காட்டூர் பீப்புள் லைப் சொசைட்டி தொண்டு நிறுவனம் சார்பில், தேசிய சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம் ராசிபுரம் அடுத்த தொ.ஜேடர்பாளையத்தில் நடந்தது. ஆர்.புதுப்பட்டி டவுன் பஞ்சாயத்து சேர்மன் ஜெயக்குமார், சுற்றுச்சூழல் வாகன பிரச்சாரத்தை துவக்கி வைத்தார்.

நாமகிரிப்பேட்டை வட்டாரத்துக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளுக்கு சென்ற பிரச்சார வாகனத்தின் மூலம், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான துண்டு பிரசுரங்களை வினியோகிக்கப்பட்டது. பஞ்சாயத்து அலுவலக வளாகத்தில் மரக்கன்று நடப்பட்டது. தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டப் பகுதியில், 'இயற்கை சூழலில் தட்ப வெட்ப மாற்றம்' பற்றிய விழிப்புணர்வு முகாம் நடந்தது. மேக்னம் நிறுவன செயலாளர் சக்திவேல் முகாமை துவக்கி வைத்தார். தொ.ஜேடர்பாளையம் பஞ்சாயத்து தலைவர் அன்பழகன் தலைமை வகித்தார். பீப்புள் லைப் சொசைட்டி செயலாளர் குணசேகரன் வரவேற்றார்.

தபால் துறை அலுவலர் வரதராஜன் முன்னிலை வகித்தார். புவி வெப்பமடைதல் குறித்தும், நிலத்தடி நீர் குறைவுக்கான காரணம் பற்றியும், மரங்கள் வளர்ப்பதன் அவசியம் குறித்தும், நீர் ஆதாரங்களை பெருக்குவது, நிலத்தடி நீரை சேமிப்பது, இயற்கை முறை விவசாயம் மற்றும் பராம்பரிய உணவு உற்பத்தி முறைகள் குறித்தும் விளக்கப்பட்டது. மக்கள் நலப்பணியாளர் சந்திரன், குடிமையியல் உரிமைகள் பாதுகாப்பு சங்க தலைவர் குப்பன், சமூக நலப்பணியாளர் மணி உள்பட பலர் பங்கேற்றனர்.

**'கோவக்காய்' விவசாயத்திற்கு மாறி வரும் தேனி மாவட்ட திராட்சை விவசாயிகள்**



தேனி : கூடுதல் லாபம் கிடைப்பதால், தேனி மாவட்டத்திலுள்ள திராட்சை சாகுபடி விவசாயிகள், கோவக்காய் விவசாயத்திற்கு மாறி வருகின்றனர்.

தேனி மாவட்டத்தில், மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்திலுள்ள கம்பம், சின்னமனூர் சுற்றுப்புறங்களிலுள்ள ஓடைப்பட்டி, சுருளிப்பட்டி, ஓபுலாபுரம், பூசாரிப்பட்டி போன்ற 50க்கும் மேற்பட்ட மலையடி கிராமங்களில் பல தலைமுறைகளாக, பச்சை, கருப்பு ரக திராட்சைகள் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. கடந்த சில ஆண்டுகளாக, மலை குறைந்து வருவதாலும், திராட்சைக்கு போதிய விலை கிடைக்காமலும், அதிக பராமரிப்பு செலவு ஆகி வருவதாலும், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனால், திராட்சையை விட கூடுதல் லாபம் கிடைக்க கூடிய, பராமரிப்பு செலவு குறைவான 'கோவக்காய்' விவசாயத்தில் இந்த விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்காக, பாதிக்கு மேற்பட்ட தோட்டங்களில் திராட்சை கொடிகள் அகற்றப்பட்டு, அவற்றுக்காக அமைக்கப்பட்ட கம்பி வளைகளின் கீழ் 'கோவக்காய்' பயிரிடப்பட்டுள்ளது. இந்த செடிகளை பராமரிக்க மிக குறைந்த அளவில் செலவு ஆகிறது. இன்னும் சில ஆண்டுகளில் பெரும்பாலான திராட்சை விவசாயிகள் இந்த மாற்று பயிர் விவசாயத்திற்கு மாறுவதற்கு வாய்ப்புள்ளது.

இதுகுறித்து ஓடைப்பட்டி பெண் விவசாயி ஊஞ்சாலம்மாள் கூறுகையில்," எங்கள் பகுதியில் பச்சை திராட்சை அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. 90 நாட்களுக்கு ஒரு முறை சீசன் வரும். போதிய மழை பெய்து, பூச்சி தாக்குதல் இல்லாவிட்டால், நல்ல விளைச்சல் கிடைக்கும். தற்போது, மழை குறைந்து, அதிக பூச்சி தாக்குதல் இருக்கிறது. இதற்கான மருந்துவிலை பலமடங்கு உயர்த்தி விற்கப்படுகிறது. மராமத்து பணிக்கு கூலி ஆட்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அப்படியே கிடைத்தாலும், ஒருநாளைக்கு பெண் கூலிக்கு ரூ.100ம், ஆண் கூலிக்கு ரூ.200ம் கொடுக்க வேண்டியுள்ளது. இந்த வகையில் ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் வரை செலவாகிறது. ஆனால், திராட்சை கிலோவுக்கு ரூ.12க்கு விற்கப்படுகிறது. இதன் மூலம் போதிய வருவாய் கிடைப்பதில்லை. இதனால், சுற்றுவட்டார பகுதியில் பல விவசாயிகள், 'கோவக்காய்' விவசாயத்திற்கு மாறிவிட்டனர். இதற்கு பராமரிப்பு செலவு மிக மிக குறைவு. தண்ணீர் தேவையும் குறைவு. கிலோ கோவக்காய் ரூ.20க்கு விற்கப்படுவதால், நல்ல விலையும் கிடைக்கிறது. கோவக்காய்க்கு நல்ல கிராக்கி இருப்பதால், பெரும்பாலான விவசாயிகள் அந்த விவசாயத்திற்கு மாறி வருகின்றனர்," என்றார்.

**குற்றால மலையில் தீ:அபூர்வ மூலிகைகள் சாம்பல்**

தென்காசி:குற்றாலம் மலையில் ஏற்பட்ட தீ விபத்தில் அபூர்வ வகை மூலிகைகள் சாம்பலானது.குற்றாலம் மலை மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் அடிக்கடி தீ விபத்துகள் ஏற்பட்டு வருகிறது. கோடை காலத்தில் இந்த தீ விபத்து மேலும் அதிகமாகிறது. தற்போது கோடை காலம் துவங்கி விட்ட நிலையில் குற்றாலம் மலையில் தீ விபத்தும் துவங்கியது. நேற்று காலை முதல் குற்றாலம்-பழையகுற்றாலம் இடையே உள்ள மலை பகுதியில் தீ கொளுந்து விட்டு எரிந்தது. நேரம் செல்ல செல்ல தீ மலையின் உச்சி பகுதிக்கு பரவியது. மாலையில் பல கி.மீ.சுற்றளவு பகுதியில் தீ எரிந்தது.

இதனால் இப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சி அளித்தது.இப்பகுதியில் அபூர்வ வகை மூலிகைகள் பல தீயில் சாம்பலானது. மேலும் மிளா, மான், காட்டு பன்றி, முள்ளம் பன்றி, காட்டு எருமை போன்ற வன விலங்குகளும் தீயில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என கூறப்படுகிறது. இதில் மலை பாம்புகளும் விலக்கல்ல.கோடை காலத்தில் இதுபோன்று அடிக்கடி தீ விபத்து சம்பவங்கள் குற்றாலம் மலை பகுதியில் ஏற்படுவதால் கடந்த பல ஆண்டுகளாக குற்றாலம்-பழையகுற்றாலம் இடைப்பட்ட பகுதியில் பெரிய அளவிலான காட்டு மரங்கள் எதுவும் இல்லாமல் உள்ளது.

இதனால் குறிப்பிட்ட காலத்தில் பருவ மழை பெய்யாமல் போகும் வாய்ப்பும், சீசன் காலதாமதம் அல்லது குறைந்த நாட்களுக்கு மட்டும் சீசன் என்ற நிலையும்தான் ஏற்பட்டு வருகிறது.குற்றாலம் மலை பகுதியில் ஏற்பட்டுள்ள தீயை அணைக்கவும், இதுபோன்ற தீ விபத்து சம்பவம் இனி வரும் காலங்களில் ஏற்படாமல் இருக்கவும், மழை பெறுவதற்காக

மலை பகுதியில் அதிகளவில் மரக்கன்றுகளை நட்டு பராமரிக்கவும் வனத்துறையினர் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தென்னை விளைச்சல் குறைந்து விற்பனை கடும் சரிவு : கொப்பரை காயாக மில்களுக்கு தள்ளிவிடும் பரிதாபம்**

வத்திராயிருப்பு : வத்திராயிருப்பு பகுதியில் மழை இல்லாததால், தேங்காய் விளைச்சல் பெருமளவு குறைந்துவிட்டது. சிறிய காய்களாக இருப்பதால் வடமாநிலங்களுக்கு அனுப்பப்படும் தேங்காய் விற்பனை பாதியாக சரிந்துள்ளது. நஷ்டத்தை தவிர்க்க வியாபாரிகள், கொப்பரை காய்களாக்கி பாதி விலையில் எண்ணெய் மில்களுக்கு விற்பனை செய்கின்றனர்.

மாவட்டத்தின் தென்னை சாகுபடி மையமாக திகழ்கிறது வத்திராயிருப்பு. இங்கு 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் தென்னை விவசாயம் நடந்து வருகிறது. தென்னையை பொருத்தவரை, வேருக்கு எவ்வளவு நீர் பாய்ச்சினாலும், மழையோ, தூறலோ இருந்தால் தான் காய்களின் விளைச்சலும், தரமும் நன்றாக இருக்கும். கடந்த ஆறு மாதத்திற்கும் மேலாக இப்பகுதியில் மழை இல்லை. வெயிலின் தாக்கமும் கடுமையாக இருப்பதால், தேங்காயின் அளவு சுருங்கி பாதி விளைச்சலிலேயே முற்றிவிடுகின்றன. தரம் பிரிக்கையில் பாதிக்கும் மேல், கழிவு காய்களாக தேங்கி விடுகின்றன.

சரிவு: ஒவ்வொரு மாதமும் வடமாநிலங்களுக்கு 60 லட்சம் தேங்காய்கள் அனுப்பப்பட்டன. இப்போதோ, 30 லட்சத்திற்கும் குறைவான காய்களே அனுப்பப்படுகின்றன. கழிவு காய்களை உள்ளூர் சந்தைகளில் கூட விற்பனை செய்ய முடியவில்லை. அவற்றை கொப்பரைக் காயாக மலிவு விலைக்கு எண்ணெய் மில்களுக்கு விற்பனை செய்கின்றனர். அங்கும் உரிய விலை கிடைக்காததால் வியாபாரிகள் பெரும் இழப்புக்கு ஆளாகி உள்ளனர். கிலோ 60 ரூபாய் விலை கிடைக்க வேண்டிய கொப்பரை, தற்போது 30 ரூபாய்க்கே விலை போகிறது.

மொத்த வியாபாரி ராமசாமி கூறியதாவது: வறட்சியால், மகசூலும் குறைந்துவிட்டதால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இரு மாதங்களுக்கு முன் ஒரு காய்க்கு 3.40 ரூபாய் கிடைத்தது. தற்போது ரூ.2.70 மட்டுமே கிடைக்கிறது, என்றார்.

மகசூல், விளைச்சல் குறைவால் விவசாயிகளும் நஷ்டமடைந்து உள்ளனர். இரு தரப்பிலும் நஷ்டத்தால் இரண்டு மாதங்களாக தென்னை விவசாயத்தில் தேக்க நிலை நிலவுகிறது.

**ரூ.50 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**

அவிநாசி: அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட் டுறவு விற்பனை சங்கத் தில் நடந்த பருத்தி ஏலத் துக்கு, கடந்த வாரத்தை போலவே, 3,700 மூட்டைகள் வரத்தாக இருந்தது. இருப்பினும், எல். ஆர்.ஏ., ஆர்.சி.எச்., பென்னி, டி.சி.எச்., ரகங்கள் விலை கடந்த வாரத்தை காட்டிலும் சற்று குறைந்துள்ளது. இருப்பினும் எல்.ஆர். ஏ., ஆர்.சி.எச்., ஆரம்ப விலை மட்டும் குவிண் டாலுக்கு ரூ.50, டி.சி. எச்., ரூ.200 அதிகரித் திருந்தது. இந்த வார ஏலத்தில் அனைத்து ரக பருத்தி விலை விபரம் (குவிண் டாலுக்கு) வருமாறு: எல்.ஆர்.ஏ., ரூ.3,250 முதல் ரூ.3,400 வரை, ஆர்.சி.எச்., மற்றும் பென்னி ரூ.3,350 முதல் ரூ.3,700 வரை, டி.சி.எச்., ரூ.4,300 முதல் ரூ.4,750 வரை, மட்டம் ரூ.2,000 முதல் ரூ.2,200 வரை.

அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறியதாவது: இந்த வாரம், கடந்த வாரத்தை போலவே வரத்து இருந்தது. இருப் பினும், அனைத்து ரகங் களின் விலையிலும் சற்று மாற்றம் காணப் பட்டது. குவிண்டா லுக்கு ரூ.20 முதல் ரூ.70 வரை குறைந்துள்ளது. திண்டுக்கல் புதுப் பட்டி, கோபி திங்களூர், கிணத்துக்கடவு பகுதி களில் இருந்து விவ சாயிகள், பருத்தியை கொண்டு வந்திருந் தனர். இந்த வார ஏலத் தில் 114 விவசாயிகள், 19 வியாபாரிகள் பயன டைந்தனர். ரூ.49.50 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது, என்றார்.

**'பஞ்சு, நூல் ஏற்றுமதிக்கு தடை தேவை'**

திருப்பூர்: 'பஞ்சு, நூல் ஏற்றுமதிக்கு முழுமையாக தடை விதிப்பதோடு, நூல் மீதான நான்கு சதவீத 'வாட்' வரியையும் ரத்து செய்ய வேண்டும்' என, விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் சங்க கூட்டமைப்பு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.

கோவை - திருப்பூர் மாவட்ட விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் சங்கங்களின் கூட்டமைப்பு செயலாளர் துரைசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் சங்கங்கள் நடத்திய உண்ணாவிரத போராட்டத்தை தொடர்ந்து, மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. நூல் ஏற்றுமதிக்கு வழங்கப்பட்டு வந்த, 7.67 சதவீத ஊக்கத்தொகை வாபஸ் பெறப்படுகிறது. பஞ்சு, நூல் ஏற்றுமதிக்கு புதிதாக 'ஏற்றுமதி தடை வரி' விதிக்கப்படுகிறது. அடுத்தாண்டு கையிருப் பாக, குறைந்தபட்சம் 50 லட்சம் பேல்கள் பருத்தி வைத்திருப்பது எனவும் முடிவு செய்யப் பட்டுள்ளது. நூல் ஏற்றுமதியாளர்கள், தங்களது பெயர்களை பதிவு செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மத்திய அரசின் இத்தகைய அறிவிப்பை, கூட்டமைப்பு சார்பாக வரவேற்று, நன்றி தெரிவிக்கிறோம். இருப்பினும், பஞ்சு மற்றும் நூல் ஏற்றுமதிக்கு முழுமையாக தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேற்றப்பட வில்லை. அக்கோரிக்கையையும் விரைவில் நிறைவேற்ற வேண்டும். அதேபோல், நீண்ட நாள் கோரிக்கை யாக உள்ள நான்கு சதவீத 'வாட்' வரியையும் ரத்து செய்ய வேண்டும், என வலியுறுத்தியுள்ளார். தொழில் துறையினர் நன்றி: ஏற்றுமதியாளர் சங்க தலைவர் சக்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'அபரிமிதமான நூல் ஏற்றுமதியால் ஏற்பட்ட நூல் விலை உயர்வை கட்டுப்படுத்தும் வகையில், ஏற்றுமதிக்கு வழங்கப்படும் 7.67 சதவீத டி.இ.பி.பி., சலுகையை நிறுத்தி வைப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளதற்கு நன்றி. மேலும், பஞ்சு மற்றும் காட்டன் நூல் ஏற்றுமதியின் மீது வரி விதிக்கவும், நூல் ஏற்றுமதியாளர்கள் பதிவு செய்ய வேண்டும் எனவும் முடிவெடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

இத்தகைய அறிவிப்பால், நூல் விலை கட்டுப்பாட்டுக்கு வருமென எதிர்பார்க்கிறோம். இருப்பினும், பனியன் தொழில் மற்றும் தொழி லாளர் நலன் கருதி, நூல் விலையை குறைக்க வேண்டும் என, நூற்பாலைகளை வலியுறுத்த வேண்டும்,' என்று கூறியுள்ளார். திருப்பூர் 'சைமா' தலைவர் ஈஸ்வரன், பொது செயலாளர் பொன்னுசாமி கூறுகையில், 'தொழில் அமைப்புகளின் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு பாதுகாப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளதற்கு தொழில் துறை சார்பில் நன்றி தெரிவிக்கிறோம்,' என்றனர்.

**தக்காளிக்கு பந்தல் அமைப்பது அதிகரிப்பு**

திருப்பூர்: தக்காளி செடிக்கு பந்தல் அமைத்து பயிர் செய்யும் விவசாயிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வெயில், மழை காலத்துக்கு ஏற்றதாக பந்தல் உள்ளது. திருப்பூர், பல்லடம், பொங்கலூர் விவசாயிகள் பயிரிடும் பயிர்களில், முக்கிய இடத்தை பிடிப்பது தக்காளி. ஆண்டு முழுவதும் தக்காளி பயிரிடப்பட்டு வருகிறது. தக்காளிக்கு பந்தல் அமைத்து, 'கொடி கட்டி' சாகுபடி செய்வது விவசாயிகள் இடையே அதிகரித்துள்ளது. வெயில், மழை காலத்திலும் தக்காளியை பாதுகாக்க முடிகிறது.

இதுகுறித்து விவசாயிகள் கூறிய தாவது: ஆண்டுதோறும் பயிரிடப்படும் பயிர்களில் தக்காளி ஒன்று; தக்காளி சாகுபடியில், விதை மற்றும் செய்முறைகளில் நவீனம் அதிகரித்துள்ளது. புதிய ரக தக்காளியை அதிகமானோர் சாகுபடி செய்கின்றனர். தக்காளிச் செடிக்கு கம்பிகளை கொண்டு, பந்தல் அமைக்கப்படுகிறது. பந்தல் அமைப்பதன் மூலம் வெயில் மற்றும் மழைகாலத்தில் செடி, பழங்களை காக்க முடியும். நிலத்தோடு தக்காளி செடி இருந்தால் வளர்ச்சி குறைய வாய்ப்புள்ளது. மழை காலத்தில் தண்ணீர் தேங்குவதால், அழுகல், பழங்களில் மண் ஒட்டுதல், பூச்சி தாக்குதல் அதிகம் ஏற்படும். வெயில் காலத்தில், மண் ணின் வெப்பம் செடி மற்றும் பழத் தில் பாதிப்பை ஏற்படுத்தும். செடிகளுக்கு இடையே காற்றோட்டம் குறைவாக இருக்கும். கடந்தாண்டுகளை விட, இந்தாண்டு அதிகமான வெயில் வீசுகிறது.

வெயில் காலத்துக்கு பந்தல் முறை சிறந்தது. பந்தல் அமைத் துள்ளதால், பழங்கள் கந்திப்போகும் நிலை தவிர்க்கப்படுகிறது. மண்ணில் உள்ள பூஞ்சைகளிடம் இருந்தும் பாதுகாப்பு ஏற்படுகிறது. மருந்து தெளிக்கும் போது, செடிகளின் அனைத்து பாகங்களில் உள்ள பூச்சிகளையும் அழிக்க முடியும். குச்சிகள் மற்றும் கம்பிகளை கொண்டு பந்தல் அமைப்பதால், குறைவான செலவு ஏற்படுகிறது. ஏக்கருக்கு 20 ஆயிரம் வரை செலவு செய்தால் போதும்; இரண்டு ஆண்டுகள் வரை தக்காளி பயிர் செய்யலாம். சில நேரங்களில் பந்தல் அமைக்க, தோட்டக்கலை துறை மூலம் கம்பிகளுக்கு பதிலாக 'நைலான் ரோப்' வழங்கப்படுகிறது. சில ஆண்டுகளாக பந்தல் அமைத்து, தக்காளி சாகுபடி செய்யும் விவசாயிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பழங்களுக்கு பாதிப்பின்றி, அதிகமாக மகசூல் கிடைக்கிறது. இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

**மாம்பழ சீசன் துவங்கியாச்சு**

திருப்பூர்: திருப்பூரில் தர்பூசணி சீசன் முடியும் தருவாயில் உள்ளது; மாம்பழங்களின் வரத்து துவங்கியுள்ளது. சீசன் இன்னும் ஒரு மாதத்துக்குள் துவங்கி விடும் என, எதிர்பார்க்கப்படுகிறது. திருப்பூர் பழ மார்க்கெட்டுக்கு மாம்பழம் வரத்துவங்கியுள்ளது. சீசன் முழுமையாக துவங்காவிட்டாலும், பச்சை மாங்காய் வரத்து அதிகரித்துள்ளது. சேலம், பெரியகுளம், தர்மபுரி பகுதிகளில் அதிகளவிலான மாம்பழங்கள் விளைவிக்கப்படுகின்றன.

மழை காலம் தாமதமாக துவங்கியதால், சீசன் இன்னும் களைகட்டாமல் உள்ளது. பாலக்காடு உள்ளிட்ட கேரளா மாநில பகுதிகளில் விளையும் மாம்பழங்களே அதிகளவில் விற்பனைக்கு வருகின்றன. மாம்பழ வியாபாரி துரைசாமி கூறுகையில், "பழங்களை விட பச்சை மாங்காயும், செந்தூரன் மாம்பழங்களே அதிகளவில் விற்பனைக்கு வருகின்றன. சீசன் துவங்குவதற்கு இன்னும் 20 நாட்கள் இருக்கின்றன. பழங்களின் தரத்தை பொறுத்து, கிலோ 25 முதல் 50 ரூபாய் வரை விற்கப்படுகிறது. மழை நன்றாக பெய்தால், பழங்களின் வரத்து அதிகரித்து, விற்பனையும் நன்றாக இருக்கும்," என்றார்.

---

***தேவைப்பாடு உயர்வு – வரத்து குறைவு மஞ்சள் விலை அதிகரிப்பு***

*எஸ் சுஜாதா*

கோயம்புத்தூர்

*தேவைப்பாடு அதிகரித்து வரும் நிலையில், வரத்தும் குறைந்துள்ளதால், மஞ்சள் வர்த்தகத்தில் நாட்டின் இரண்டாவது பெரிய சந்தையான ஈரோட்டில் மஞ்சள் விலை உயர்ந்து வருகிறது.*

ஒரு குவிண்டால்

*சென்ற 2009–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், இங்கு ஒரு குவிண்டால் மஞ்சள் விலை ரூ.13,750 என்ற அளவில் மிகவும் அதிகமாக இருந்தது. நடப்பு ஆண்டில், இது ரூ.7,000–10,000 என்ற அளவில் இருக்கும் என மதிப்பிடப்பட்டது.*

*ஆனால், மஞ்சள் வரத்து அதிகமாக இருக்கும் மார்ச் மாதத்தில், ஒரு குவிண்டால் மஞ்சள் விலை ரூ.10,000 என்ற*

அளவை எட்டியது என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டு வாரங்களுக்கு முன் இது ரூ.13,000–ஆக உயர்ந்தது. இரண்டு தினங்களுக்கு முன்னர் ஈரோடு நடப்பு சந்தையில் ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ.12,000–13,000 என்ற அளவில் இருந்தது.

என்.சி.டீ.எக்ஸ்.

என்.சி.டீ.எக்ஸ். முன்பேர வர்த்தக சந்தையில் ஏப்ரல் 20–ந் தேதி டெலிவரிக்கான ஒரு குவிண்டால் மஞ்சள் விலை ரூ.11,524–ஆக இருந்தது. இது, மே மற்றும் ஜூன் மாத டெலிவரிக்கு ரூ.11,000–ஆக இருந்தது. இந்நிலையில் இதன் விலை ரூ.10,400 அல்லது ரூ.10,200 என்ற அளவிற்கு இறங்கினால், மஞ்சளை அதிக அளவில் வாங்கலாம் என்று இச்சந்தையில் உள்ள ஊக வணிகர்கள் தெரிவித்தனர். ஏனென்றால், பின்னர் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் அதிக ஆதாயம் அடையலாம் என அவர்கள் மேலும் கூறினர்.

இந்நிலையில் மசாலா தூள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தொழிலகங்கள், மஞ்சள் விலை ஓரளவிற்கு உயர்ந்தால் பாதிப்பு இருக்காது என்றும், விலை மேலும் அதிகரிக்கும் பட்சத்தில் இதனை நுகர்வோர் மீது சுமத்துவது தவிர்க்க இயலாதது என்றும் தெரிவித்துள்ளன. நாட்டில் மஞ்சள் கையிருப்பு அநேகமாக காலியாகி விட்டது. மேலும் சர்வதேச அளவில் தேவை அதிகரித்து வருகிறது. இதனால் இயற்கையாக விலை அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் நடப்பு ஆண்டில், உள்நாட்டில் மஞ்சள் உற்பத்தி 35–40 லட்சம் மூட்டைகளாக (ஒரு மூட்டை சுமார் 80 கிலோ) இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பயன்பாடு 40–45 லட்சம் மூட்டைகளாக உள்ளது. நடப்பாண்டில் குறைந்தபட்சம் 2–3 லட்சம் மூட்டை மஞ்சளுக்கு பற்றாக்குறை ஏற்படும் என ஈரோடு மஞ்சள் வர்த்தகர்கள் சங்க செயலாளர் எம்.நடராஜன் தெரிவித்தார்.

மஞ்சள் அறுவடைப் பணிகள் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்க உள்ளது. எனினும் தேவைப்பாட்டை ஈடுகட்டும் அளவிற்கு மஞ்சள் கிடைக்காததால் இதன் விலை குறைய வாய்ப்பில்லை என சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. பொதுவாக சந்தைகளுக்கு மஞ்சள் வரத்து ஜனவரி மாதத்தில் தொடங்கி, மார்ச் மாதத்தில் மும்முரமடையும். ஜூன் மாதம் வரை இது நீடிக்கும்.

ஈரோடு சந்தை

விலை உயர்வை எதிர்பார்த்து, விவசாயிகள் அறுவடை செய்த மஞ்சளை சந்தைக்கு அனுப்புவதை விடுத்து, தம்மிடமே வைத்துக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். ஈரோடு சந்தைக்கு உள்ளூரிலிருந்தும், பவானி, சேலம், ஆத்தூர் மற்றும் சாம்ராஜ் நகர் (கர்நாடகா) ஆகிய இடங்களிலிருந்தும் மஞ்சள் வருகிறது. நாட்டின் மொத்த மஞ்சள் உற்பத்தியில் இந்த மண்டலத்தின் பங்களிப்பு ஆண்டுக்கு 15–20 லட்சம் மூட்டைகளாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் அரசின் கோதுமை கொள்முதல் 2.63 கோடி டன்னாக உயரும்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

கோதுமை கொள்முதல் பருவம் ஏப்ரல் 1–ந் தேதியிலிருந்து தொடங்கி உள்ளது. நடப்பு பருவத்தில் மத்திய அரசின் கோதுமை கொள்முதல் 2.63 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற பருவத்தைக் காட்டிலும் 3.5 சதவீதம் அதிகமாகும். அப்பருவத்தில் விவசாயிகளிடமிருந்து 2.54 கோடி டன் கோதுமையை அரசு வாங்கியது.

இந்திய உணவு கழகம்

இது குறித்து இந்திய உணவுக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் சிராஜ் ஹுசைன் கூறும்போது, “நடப்பு கொள்முதல் பருவத்தின் முதல் வாரத்தில் மொத்தம் 13.09 லட்சம் டன் கோதுமை சந்தைகளுக்கு

வந்துள்ளது. இதில் 9.96 லட்சம் டன்னை மத்திய மற்றும் மாநில அரசு அமைப்புகள் கொள்முதல் செய்துள்ளன" என்று தெரிவித்தார்.

நடப்பு ஆண்டில், குஜராத், மத்தியபிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் கோதுமை கொள்முதல் முன்னதாகவே தொடங்கி விட்டது. குஜராத் நீங்கலாக இந்த மாநிலங்களில் தற்போது கொள்முதல் நடவடிக்கை விறுவிறுப்புடன் நடைபெற்று வருகிறது.

மத்தியபிரதேசம்

நடப்பு பருவத்தில் மத்தியபிரதேச மாநிலத்தில் மட்டும் கோதுமை கொள்முதல் 40 லட்சம் டன்னை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னர் இது 35 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. கிழக்கு மாநிலங்களில் கோதுமை கொள்முதல் இனிமேல்தான் வேகம் எடுக்கும் என்று கூறப்படுகிறது.

குஜராத் மாநிலத்தில் தனியார் வர்த்தகர்களின் ஆதிக்கம் மேலோங்கி உள்ளதால், அரசு அமைப்புகள் மேற்கொள்ளும் கோதுமை கொள்முதல் மந்தமாக உள்ளது. அதே சமயம் அரியானா மாநிலத்தில் தனியாரைக் காட்டிலும் அரசு அமைப்புகள் மேற்கொள்ளும் கொள்முதல் அதிகமாக உள்ளது. இங்கு தனியார் 15 டன் கோதுமையை கொள்முதல் செய்துள்ள நிலையில், அரசு அமைப்புகள் 2.07 லட்சம் டன்னை வாங்கியுள்ளன.

இந்நிலையில், ஏப்ரல் 1–ந் தேதி நிலவரப்படி மத்திய அரசின் அரிசி கொள்முதல் 2.55 கோடி டன்னாக உள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 2.63 கோடி டன்னாக இருந்தது.

**உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 17.70%–ஆக உயர்வு**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் மார்ச் 27–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 17.70 சதவீதமாக மேலும் உயர்ந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில் 16.35 சதவீதமாக இருந்தது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், பருப்பு வகைகள், கோதுமை, பழங்கள், காய்கறிகள், கடல் மீன்கள், பால் போன்றவற்றின் விலை அதிகரித்து காணப்பட்டது.

குறிப்பாக, பருப்பு வகைகள் 32.60 சதவீதம், பால் பொருள்கள் 21.12 சதவீதம், பழங்கள் 14.95 சதவீதம், கோதுமை 13.34 சதவீதம் அதிகரித்திருந்தது.

சென்ற பிப்ரவரி மாதத்தில், மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் நாட்டின் பணவீக்கம் 9.89 சதவீதமாக அதிகரித்திருந்தது. இந்த நிலையில், சென்ற மார்ச் மாதத்தில், பணவீக்கம், பாரத ரிசர்வ் வங்கியின் மதிப்பீட்டிற்கும் அதிகமாக 10 சதவீதத்தை தாண்டிவிடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வர, ரிசர்வ் வங்கி கடன் கொள்கையில் மேலும் கட்டுப்பாடுகளை அறிவிக்கும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

இந்த நிலையில், உலக அளவில், பொருளாதார வளர்ச்சி வேகத்தில் இரண்டாவது பெரிய நாடாக திகழும் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி நடப்பு நிதி ஆண்டில் 8.5 சதவீதமாகவும், அடுத்த நிதி ஆண்டில் 9 சதவீதமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



கோவையில் விற்பனைக்கு குவிந்துள்ள செந்தூர மாம்பழங்களை படத்தில் காணலாம்.

# இந்த ஆண்டு மாம்பழ சீசன் ரொம்ப 'சூடு'

## விளைச்சல் குறைந்ததால் விலை அதிகமானது

கோவை,ஏப்.9–

இந்த ஆண்டு விளைச்சல் குறைந்ததால் மாம்பழங்கள் விலை அதிகரித்துள்ளது.

### பழங்கள் வரத்து குறைந்தது

கோவையில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் மாம்பழ சீசன் தொடங்கி விடும். ஆனால் இந்த ஆண்டு எப்ரல் மாதம் தொடங்கியும் கோவை மார்க்கெட்டுக்கு மாம்பழங்கள் வரத்து முழு அளவில் இல்லை. கோவை மார்க்கெட்டுக்கு சீசனின் முதல் பகுதியில் கேரள மாநிலம் பாலக்காட்டிலிருந்து மாம்பழங்கள் வந்து விடும். அதை தொடர்ந்து சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஒட்டன்சத்திரம் ஆகிய பகுதிகளிலிருந்து மாம்பழங்கள் கோவை மார்க்கெட்டுகளில் குவியும். ஆனால் இந்த ஆண்டு நிலைமை அப்படியில்லை.

மேலும் சித்திரைக்கனி பண்டிகையையொட்டியும் கோவை மார்க்கெட்டுக்கு பழங்கள் வரத்து அதிகமாக காணப்படும். ஆனால் இன்னும் 6 நாட்களில் சித்திரை கனி பண்டிகை வர உள்ளது. இந்த நிலையில் பழங்கள் விற்பனை குறைந்துள்ளது. இதற்கு காரணம் மற்ற பழங்களின் வரத்தும் குறைந்தது தான் என்று வியாபாரிகள் கூறுகிறார்கள்.

### விலை அதிகரிப்பு

வரத்து குறைவால் பழங்களின் விலை அதிலும் குறிப்பாக மாம்பழங்களின் விலை கடந்த ஆண்டை விட மிக அதிகமாக இருப்பதாக வியாபாரிகள் கூறுகிறார்கள். கோவை மார்க்கெட்டுகளுக்கு வழக்கமாக செந்தூரம், பங்கனபள்ளி, இமாம்பசந்த், உதாதத், ஆப்பேஸ், நீலம் ஆகிய 6 ரக மாம்பழங்கள் வரும்.

ஆனால் இந்த ஆண்டு இப்போது தான் மாம்பழங்கள் வர தொடங்கி உள்ளன. அதுவும் பாலக்காடு மாவட்டத்திலிருந்து செந்தூரம், பங்கனபள்ளி, போன்ற ரக மாம்பழங்கள் வந்துள்ளன. இதில் செந்தூரம் மாம்பழம் இப்போது ஒரு கிலோ 45 ரூபாய்க்கு விற்கிறது. இது சீசன் நேரத்தில் ஒரு கிலோ 25 ரூபாய்க்கு தான் விற்கும். பங்கனபள்ளி ஒரு கிலோ 60 ரூபாய்க்கும், இமாம் பசந்த் ஒரு கிலோ 90 ரூபாய்க்கும், உதாதத் ஒரு கிலோ 60 ரூபாய்க்கும் விற்கிறது. இந்த பழங்கள் எல்லாமே சீசன் நேரத்தில் இப்போது விற்கும் விலையில் பாதி விலை தான் விற்கும். ஆனால் இப்போது விலை இரு மடங்கு உயர்ந்துள்ளது.

### காரணம் என்ன?

கோவை மார்க்கெட்டுகளுக்கு மாம்பழங்கள் வரத்து குறைந்தது ஏன்? என்பது குறித்து கணபதியில் பழக்கடை வைத்திருக்கும் வளர்மதி ராமசாமி கூறியதாவது:–

இந்த ஆண்டு பருவமழை தவறியதால் மாம்பழ விளைச்சல் குறைந்துள்ளது. இந்த ஆண்டு மாம்பழ சீசன் தொடங்கி 2 மாதங்கள் ஆகியும் வரத்து அதிகரிக்கவில்லை, தமிழகத்திலிருந்து வர வேண்டிய மாம்பழங்கள் இன்னும் வரவில்லை. இதன் காரணமாகவும் மாம்பழங்கள் விலை இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது.'

இவ்வாறு அவர் கூறினார்.